# பெலாரஸ்



## பாடுவதற்கு ஒரு பாடல்

*வலிப்பு பிரச்சனைகள் வரவில்லை; அது தேவனுடைய அற்புதம்!*

பெலாரஸில் தான் பிறக்கும் போதே பெருமூளை வாதத்தால் பாதிக்கப்பட்டிருந்தார் விக்டர். கர்ப்பக்காலத்தில் அவருடைய மூளை வளர்ச்சி முழுமையாக இல்லை; அதனால் ஏற்பட்ட அறிவாற்றல் குறைப்பாட்டைப் போக்குவதற்கு நீண்ட காலம் சிகிச்சை எடுக்க வேண்டியிருந்தது; அதற்கு உடலியல் சிகிச்சையும், மருத்துவச் சிகிச்சையும், தேவைப்பட்டால் அறுவை சிகிச்சையும் தேவைப்படும். சிகிச்சைகளால் பயனுண்டு என்றாலும், அந்த வியாதியை முற்றிலும் குணமாக்க முடியாது என்று மருத்துவர்கள் கூறினார்கள்.

அதுபோக வலிப்பு பிரச்சினைகளாலும் பாதிக்கப்பட்டிருந்தார்.

'முதல் நிலை, மாற்றுத்திறனாளி' குழுவில் சேர்க்கப்பட்டார்; அது தீவிர இயலாமை பிரச்சனை உள்ளவர்களுக்கு அந்நாட்டில் வழங்கப்பட்டிருந்த பெயர்.

விக்டருக்கு எதிர்காலம் இருட்டாக இருந்தது; அவரது அம்மா அவரைக் கைவிட்ட பிறகு அது மேலும் இருளடைந்தது. அவரை அநாதை இல்லத்திற்கு அனுப்பி வைத்தார்கள்.

பெலாரஸின் ஓரிடத்தில், ஒரு செவந்த் - டே அட்வென்டிஸ்ட் தாயார் ஒரு நாள் இரவில் ஒரு மருத்துவமனையில் ஒரு குழந்தையின் அழுகுரலைக் கேட்டார். அழுகுரல் கேட்கும், பிறகு அமைதியாகும், பிறகு மீண்டும் அழுகை கேட்கும். அந்த அழுகுரல் மனதை விட்டு அகலவில்லை. அதனால் அந்தக் குழந்தையைத் தேடினார். டேனில் என்கிற அந்தக் கைக்குழந்தை மழ

லையர் சிகிச்சை பிரிவில் இருந்ததை ஒரு செவிலியர் அவருக்குக் காண்பித்தார்; அவனை அவன் அம்மா கைவிட்டுச் சென்றதாகச் சொன்னார்.

அந்தக் குழந்தைமேல் இரக்கம் ஏற்பட்டது; மறுநாள் காலையிலேயே தன் கணவரை அழைத்தார்.

“இங்கு ஒரு குழந்தை இருக்கிறது; நீங்கள் வந்து அவனைப் பாருங்கள்” என்று சொன்னார்.

அவரும் சென்றார். தம்பதியர் இருவரும் சேர்ந்து இரண்டாவது முறையாக அந்தச் சிறுவனைப் பார்க்கச் சென்றார்கள். பிறகு, அவனைத் தத்தெடுப்பதற்கு யோசித்தார்கள்.

அம்மாவுக்கும் அப்பாவுக்கும் ஏற்கனவே ஐந்து பெண்குழந்தைகள் இருந்தார்கள்; டேனில் முதல் ஆண் பிள்ளையானான்.

பிறகு, இரண்டாவது ஒரு குழந்தையைத் தத்தெடுக்க யோசித்தார்கள். டேனிலுக்கு பெருமூளை வாதத்தால் பாதிக்கப்பட்ட ஒரு சகோதரன் இருப்பதை அறிந்தார்கள். அது விக்டர். அவனை அநாதை இல்லத்திலிருந்து தத்தெடுத்து, வீட்டிற்கு அழைத்து வந்தார்கள்.

தன் புதிய குடும்பத்தினரிடம் முதன் முறையாக தேவனைப் பற்றி விக்டர் கேள்விப்பட்டான். வேதாகமத்தை வாசிக்கவும் ஜெபிக்கவும் கற்றுக்கொண்டான். ஒவ்வோர் ஓய்வுநாளிலும் தன் குடும்பத்தினரோடு சபைக்குச் சென்றான்.

வளர்ந்து பெரியவரான பிறகு, தான் தேவனுடைய அதிசயக் குழந்தை என்பதை உணர்ந்தார். தனக்கு ஒரு குடும்பம் இருப்பதும், ஏன் தான் உயிரோடு இருப்பதுமே ஓர் அற்புதம் என்பதை உணர்ந்தார். தன் வாழ்க்கையில் தேவசித்தம் நிறைவேற வேண்டுமென ஜெபிக்க ஆரம்பித்தார்.

வருடங்கள் கடந்தன. விக்டர் திடகார்த்தமான இளைஞராக வளர்ந்தார். ஆனால் மருத்துவ ரீதியாக, ‘முதல் நிலை, மாற்றுத்திறனாளி’ என்கிற பிரிவினரோடு சேர்க்கப்பட்டிருந்தார்.

எட்டாம் வகுப்பு முடித்த பிறகு, எந்தப் பிரிவைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று அவருக்கு அதிக வாய்ப்பில்லை. மருத்துவர் இரண்டு தேர்வுகளைக் கொடுத்தார்: ஒன்று காலணிகளைச் செப்பணிடுகிற வேலையைச் செய்யலாம் அல்லது பழம், காய்கறிகளை விற்கலாம். மருத்துவப் பரிசோதனைபடி அவர் கடினமான வேலைகளிலும் வேறு பல செயல்பாடுகளிலும் ஈடுபட முடியாது.

விக்டருக்கு காலணிகளை விற்பதிலும் அல்லது பழம், காய்கறிகளை விற்பதிலும் ஆர்வமில்லை. தேவன் தலையிடவேண்டுமென ஜெபித்தார்.

சில நாட்கள் கழித்து, தேவன் எதிர்பாராத விதத்தில் தலையிட்டார். விக்டர் ‘முதல் நிலை, மாற்றுத் திறனாளி’ பிரிவில் இருக்கவேண்டிய அவசியமில்லை என்று மருத்துவர் சான்றழித்தார். அவர் நல்ல உயரமாக, திடகார்த்தமாக இருந்தார்; வலிப்பு பிரச்சனைகள் வரவில்லை; அது தேவனுடைய அற்புதம்!

இசைத்துறையைத் தேர்வு செய்வதற்கு அப்பா பரிந்துரைத்தார். விக்டருக்கு பாடல்பாடுவது பிடிக்கும்; சபையில் விசேஷித்த பாடலைப் பாடுவதுண்டு.

இசைப்பள்ளி ஒன்றில் அவருக்கு இடம் கிடைத்தது. இசை பாடம் கற்றுக்கொண்டது மட்டுமல்லாமல், இசையமைக்கவும், பாடல்கள் எழுதவும், பியானோ இசைக்கவும் கற்றுக்கொண்டார். பிறகு, சொந்தமாக இசைக்கச்சேரியும் நடத்தினார்.

இன்று, தான் இசைக்கல்லூரி படிப்பை முடித்த பிறகு என்ன செய்யவேண்டும் என்று யோசித்துக் கொண்டிருக்கிறார். ஆனால் ரஷ்யாவில் உள்ள சாவோவ்ஸ்கி அட்வென்டிஸ்ட் பல்கலைக்கழகத்தில் தன் கல்வியைத் தொடர விரும்புகிறார். எதைக் குறித்தும் அவர் கவலைப்படவில்லை. தேவனுக்கு ஒரு திட்டம் இருக்கும் என்பதில் உறுதியாக இருக்கிறார். 'நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே.'

"தேவன் என்னைக் குறித்து என்ன திட்டம் வைத்திருக்கிறார் என்று தெரியவில்லை; ஆனால் சகலத்தையும் அவர் நன்மையாக முடியச் செய்வார் எனப்தில் உறுதியாக இருக்கிறேன்" என்று சொன்னார்.

பெலாரஸின் மின்ஸ்கில் உள்ள இளைஞர்களுக்கு செல்வாக்கு மையம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு இந்தக் காலாண்டின் பதின்மூன்றாம் வாரக் காணிக்கையின் ஒரு பகுதி பயன்படும்.

## கதைக் குறிப்புகள்

- விக்டர் பாடுகிற பாடலைக் கேட்க: bit.ly/Viktor1-ESD.
- முகநூலிலிருந்து புகைப்படங்களைப் பதிவிறக்க: bit.ly/fb-mq.
- யூரோ ஆசியா டிவிஷனிலிருந்து ஊழிய விவரங்களையும் துணுக்குகளையும் பதிவிறக்க: bit.ly/esd-2024.
- அடுத்த வாரம் ஆலியாவின் மகள் வயலெட்டாவைப்பற்றி அதிகம் கற்றுக்கொள்ளலாம்.
- செவந்த்–டே அட்வென்டிஸ்ட் திருச்சபைசின் "ஐ வில் கோ" என்ற திட்டத்தின் பின்வரும் நோக்கங்களை இந்த ஊழியக்கதை விளக்குகிறது.
- ஆன்மிக வளர்ச்சியின் குறிக்கோள் எண். 5, "தனிநபர்களையும் குடும்பங்களையும் ஆவியில் நிறைந்த வாழ்வுள்ளவர்களாக மாற்றவேண்டும்".
- ஆன்மிக வளர்ச்சியின் குறிக்கோள் எண். 6, 'குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் இளம் வாலிபர்களின் சேர்க்கை, தக்கவைப்பு, மீட்பு மற்றும் பங்கேற்பு ஆகியவற்றை அதிகரிக்கவேண்டும்'.